**1] GDP அடிப்படையிலான சுற்றுலா பொருளாதாரத்தில் , உலகளவில் இந்தியா 7வது இடம் பெற்றுள்ளதாக World Travel and Tourism Council (WTTC) தெரிவித்துள்ளது.**

**2] உலக அளவில் சுற்றுலா மற்றும் பயண போட்டித்தன்மைகள் கொண்ட நாடுகள் பட்டியலை உலக பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ளது.**

- ✓ இதில் இந்தியா 40-வது இடத்தில் உள்ளது.
- ✓ ஸ்பெயின் நாடு முதலிடத்தில் உள்ளது. பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

**3] புகை பிடித்தல் காரணமாக அதிகம் உயிரிழப்போர் நாடுகள் பட்டியலில் சீனா முதலிடத்தையும், இந்தியா 2-வது இடத்தையும் பிடித்துள்ளது.**

- ✓ அமெரிக்கா, ரஷியா ஆகிய இரு நாடுகளும் 3 மற்றும் 4-வது இடத்தைப் பிடித்துள்ளன.
- ✓ சீனா, இந்தியா, இந்தோனேசியா நாடுகளில் ஆண்கள் அதிகம் புகை பிடிக்கின்றனர்.
- ✓ புகைபிடிக்கும் பெண்கள் உள்ள நாடுகள் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தையும், சீனா 2-வது இடத்தையும் இந்தியா 3-வது இடத்தையும் பிடித்துள்ளது.

**4] உத்தரப்பிரதேச மாநிலம் முசாபர் நகர் மாவட்ட நீதிமன்றத்தில் குடும்ப நல நீதிபதியாக பணியாற்றி வரும் தேஜ் பிரதாப் சிங், கடந்த ஆண்டில் 327 வேலை நாட்களில் 6,065 வழக்குகளுக்கு தீர்வு கண்டு கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.**

**5] தாய்லாந்து நாட்டில் நடந்து வரும் சர்வதேச குத்துச்சண்டை சாம்பியன் போட்டியின் 49 கிலோ எடைப்பிரிவில் இந்திய வீரர் ஷ்யாம் குமார் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.**

- ✓ 49 கிலோ எடைப் பிரிவினருக்கான இறுதி போட்டியில் 19 வயதான ஷ்யாம் குமார், முன்னணி உஸ்பெகிஸ்தான் வீரரான ஹசன்பாய் டஸ்மாடோவ்-வை எதிர்கொண்டார். ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே டஸ்மோவ் காயம் காரணமாக விலகினார்.
- ✓ இதனையடுத்து ஷ்யாம் குமார் தங்கப்பதக்கம் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

**6] ஜெர்மன் விண்வெளி ஆய்வாளர்கள் இணைந்து 149 சக்திவாய்ந்த செனான் மின்விளக்குகளால் உலகின் மிகப்பெரிய சூரியனை உதிக்கவைத்துள்ளனர்.**

- ✓ இயற்கையான சூரிய ஒளியை 'சன்லைட்' என்று அழைப்பதனால் செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள இந்த செயற்கை சூரியனுக்கு 'சின்லைட்' என பெயரிட்டுள்ளனர்.

**7] விண்வெளியில் சூரிய மண்டலத்துக்கு வெளியே ஏராளமான கோள்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் தற்போது புதிதாக ஒரு கோள் கண்டறியப்பட்டுள்ளது.**

- ✓ அதற்கு ஜிஜே 1132பி என பெயரிடப்பட்டுள்ளது.
- ✓ இப்புதிய கிரகத்தை ஜெர்மனியின் மாஸ் பிளாங்க் என்ற கிரகங்களை ஆய்வு செய்யும் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.
- ✓ இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட புதிய கிரகங்களில் வளிமண்டலம் எதுவும் இல்லை. ஆனால் இதில் பூமியில் இருப்பது போன்று வளிமண்டலம் உள்ளது.
- ✓ இக்கிரகம் பூமியை போன்று 1.4 மடங்கு பெரியதாக உள்ளது. இது பூமியில் இருந்து 39 வெளிச்ச ஆண்டுகள் தூரத்தில் உள்ளது.

**8] உலகம் முழுவதுமுள்ள பெண் குழந்தைளுக்கான கல்வி உரிமையை ஊக்குவிப்பதற்காக , ஐ.நா சபையின் " இளம் அமைதித் தூதராக " மலாலா யூசுப்சாய் நியமிக்கப்பட்டுள்ளார்.**

- ✓ [ கடந்த 2014-ம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு இந்தியாவைச் சேர்ந்த கைலாஷ் சத்தியார்த்தி மற்றும் 19 வயதே ஆன மலாலா ஆகியோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.]

**9] இந்திய மென்பொருள் நிறுவனங்கள் சங்க { National Association of Software and Services Companies (NASSCOM) } தலைவராக , Quatrro நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ராமன் ராய் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- ✓ துணை தலைவராக விப்ரோ நிறுவனர் அஸிம் பிரேம்ஜியின் மகன் ரிஷாத் பிரேம்ஜி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**10] மாநில தேர்தல் ஆணையாளராக ஓய்வு பெற்ற IAS அதிகாரி மாலிக் பெரோஸ் கான் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

- ✓ மாநிலத் தேர்தல் ஆணையராக இருந்த சீதாராமன், கடந்த மார்ச் மாதம் ஓய்வு பெற்றுள்ளார்.

**11] பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் உலக தரவரிசையில் P.V. சிந்து 5வது இடத்தில் இருந்து 2வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.**

- ✓ 1 -- Tai Tzu Ying , சீன தைபே
- ✓ 3 -- கரோலின் மரின் , ஸ்பெயின்
- ✓ சாய்னா நேவல் 9வது இடத்தில் உள்ளார்.

**12] இந்திய ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (The Federation of Indian Export Organisations) புதிய தலைவராக கணேஷ் குமார் குப்தா மற்றும் துணை தலைவராக சென்னையை சேர்ந்த M. ரபீக் அகமது ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

**13] சர்வதேச ஊக்கமருந்து தடுப்புக் கழகத்தின் 2015-ம் ஆண்டுக்கான ஊக்க மருந்து தடை விதிமீறல் பட்டியலில் இந்தியா தொடர்ந்து 3-வது ஆண்டாக 3ம் இடம்பெற்றுள்ளது.**

- ✓ இந்தப் பட்டியலில் ரஷ்யா முதலிடம் (176), இத்தாலி (129) இரண்டம் இடம் பெற்றுள்ளன.
- ✓ 2015-ம் ஆண்டில் மட்டும் 117 இந்திய வீரர்கள் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து எடுத்துக் கொண்டதற்காக தண்டிக்கப்பட்டுள்ளனர்.
- ✓ தனிநபர் விளையாட்டுகளில் பளுதூக்குதல் பிரிவில் மட்டும் 32 இந்திய ஆடவர் 24 மகளிர் வீரர் விராங்கனைகள் என்று 56 பேர் தடை செய்யப்பட்டுள்ளனர். தடகளம் 21 மீறல்களுடன் 2-ம் இடம் வகிக்கிறது. குத்துச்சண்டையில் 8 வீரர்கள் ஊக்க மருந்தில் சிக்கினர், சைக்கிளிங், கபடி, ஆகியவற்றில் தலா 3 வீரர்கள் ஊக்க மருந்து சோதனையில் சிக்கினர்.

**14] சர்வதேச அளவில் மிக விலையுயர்ந்த அலுவலக இடங்களில் டெல்லியில் உள்ள கன்னாட் பிளேஸ் 9-வது இடத்தை பிடித்துள்ளது.**

- ✓ கன்னாட் பிளேஸில் ஒரு ஆண்டுக்கு ஒரு சதுர அடிக்கு 105.71 டாலர் வாடகையாக உள்ளது என பிராப்பர்டி ஆலோசனை நிறுவனமான சிபிஆர்இ நடத்திய ஆய்வில் தெரிவித்துள்ளது.
- ✓ ஹாங்காங் சென்ட்ரல் முதலிடத்தை பெற்றுள்ளது. இங்கு ஆண்டுக்கு 264.27 டாலர் (ஒரு சதுர அடிக்கு) வாடகையாக உள்ளது.
- ✓ பெய்ஜிங்கில் உள்ள பைனான்ஸ் ஸ்ட்ரீட் மற்றும் ஹாங்காங்கில் உள்ள கவ்லூன் ஆகியவை இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை பெற்றுள்ளன.

- ✓ பெய்ஜிங்கில் உள்ள சிபிடி 4-வது இடத்தை பிடித்துள்ளது. லண்டனில் உள்ள வெஸ்ட் எண்ட் 5-வது இடத்தையும் நியூயார்க் நகரத்தில் உள்ள மிட்டவுன் மன்ஹாட்டன் 6-வது இடத்தையும் டோக்கியோ நகரத்தில் உள்ள மருனொச்சி 7-வது இடத்தையும் ஷாங்காய் நகரத்தில் உள்ள புடாங் 8-வது இடத்தையும் பிடித்துள்ளன.

**15] சாசெக் - South Asia Subregional Economic Cooperation ( SASEC) தெற்காசிய நாடுகளின் துணை பிராந்திய பொருளாதார கூட்டமைப்பு மாநாடு புது டெல்லியில் நடைபெற்றது.**

- ✓ சாசெக் கூட்டமைப்பு 2001-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதில் வங்கதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவுகள், நேபாளம், இலங்கை ஆகியவை உறுப்பு நாடுகளாக உள்ளன. மியன்மர் தற்போது இணைந்துள்ளது.

**16] குஜராத் மாநிலத்தின் முதல் பெண் டிஜிபியாக கீதா ஜோஹ்றி நியமிக்கப்பட்டுள்ளார்.**

**17] சென்னையைச் சேர்ந்த ஸ்ரீநாத் நாராயணன் செஸ் விளையாட்டில் இந்தியாவின் 46-வது கிராண்ட் மாஸ்டரானார்.**

**18] மியாமி ஓபன் டென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் காப்ரியலா டப்ரோவ்ஸ்கி - ஜு யிபான் ஜோடி , சானியா மிர்ஸா - ஸ்டிரைகோவா ஜோடியை தோற்கடித்து பட்டம் வென்றுள்ளனர்.**

**19] மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடாலை வீழ்த்தி சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் சாம்பியன் பட்டத்தை வென்றார்.**

- ✓ இந்த ஆண்டில் பெடரர் வென்ற 3-வது பட்டமாகும். கிராண்ட்சிலாமான ஆஸ்திரேலிய ஓபன், மற்றும் இன்டியன் வெல்ஸ் போட்டியில் பட்டம் வென்று இருந்தார்.
- ✓ 35 வயதான பெடரருடன் கடைசியாக மோதிய 4 ஆட்டத்திலும், நடால் தோற்று உள்ளார்.

**20] சர்வதேச விண்வெளி ஆய்வகத்துக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் எந்திரங்கள், கட்டுமான பொருட்கள் போன்றவற்றை தனியாருக்கு சொந்தமான**

**ஸ்பேஸ் எக்ஸ் என்ற ராக்கெட் மூலம் அனுப்பப்பட்டு வந்தன. இதுதவிர உலகில் உள்ள சிறிய நாடுகளுக்கு சொந்தமான செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பி நிலைநிறுத்தும் சேவையையும் உரிய கட்டணம் பெற்றுகொண்டு இந்நிறுவனம் செய்து வருகிறது.**

- ✓ லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு சொந்தமான 65 செயற்கைக் கோள்களை மறுசுழற்சி செய்யப்பட்ட ராக்கெட்டின் மூலம் ஸ்பேஸ் எக்ஸ் ஃபால்கன் நிறுவனம் புளோரிடா மாநிலத்தில் உள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து மார்ச் 30ல் விண்ணில் செலுத்தி, வெற்றிகரமாக நிலைநிறுத்தியுள்ளது.

**21] காச நோயை புதிய முறை ரத்த பரிசோதனை மூலம் ஒரு மணி நேரத்தில் கண்டுபிடிக்கும் முறையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதற்கு 'நானோ டிஸ்க்' என பெயரிட்டுள்ளனர்.**

- ✓ தற்போது வரை, ரத்த மாதிரிகள் வழங்கப்பட்டு 3 நாட்கள் அல்லது ஒரு வாரம் கழித்து தான் அறிய முடியும்.

**22] Minister For Sex**

- ✓ ஸ்பெயின் நாட்டில் மக்களின் இறப்புக்கு ஏற்ப குழந்தைகள் பிறப்பில் சமநிலை இல்லாததால் கிடுகிடுவென சரிந்துவரும் மக்கள் தொகையின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்தில் தம்பதியருக்கு கிளுகிளுப்பை ஏற்படுத்தி, தாம்பத்தியத்தை ஊக்குவிக்க செக்ஸ் மந்திரியாக ★ எடெல்மிரா பரெய்ரா ★ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**23] முன்னாள் முதல்-அமைச்சர் O. பன்னீர்செல்வத்துக்கு 'Y' பிரிவு பாதுகாப்பு வழங்கி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. 11 சிஆர்பிஎப் வீரர்கள் பன்னீர்செல்வத்துக்கு பாதுகாப்பு வழங்குவர்.**

**24] கூகுள் நிறுவனம் நடத்தும் 'டூடுள் 4 கூகுள்' போட்டியில் இந்த ஆண்டு வெற்றியாளர் கணெக்டிகட் மாணவி சாரா ஹாரிசன் என கூகுள் அறிவித்துள்ளது.**

- ✓ எதிர்காலத்தில் நான் எதை பார்க்க வேண்டும் என்ற தலைப்பில் இந்த ஆண்டிற்கான டூடுளை மாணவர்கள் வடிவமைத்தனர்.
- ✓ அந்த வகையில் இந்த ஆண்டு வெற்றியாளரான ஹாரிசன், 'எனது எதிர்காலத்தில் மதம், பாலினம், சாதி உள்ளிட்டவைகளை கடந்து நாம்

அனைவரும் மற்றவர்கள் மீது சமமாக அன்பு செலுத்த வேண்டும்', என தெரிவித்துள்ளார்.

25] **கேரளாவின் கண்ணூர் மாவட்டம் பிளாஸ்டிக் பையை முற்றிலும் ஒழித்த இந்தியாவின் முதல் மாவட்டம் என்ற பெயரை பெற்றுள்ளது.**

- ✓ கேரளாவில் உள்ள கண்ணூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 1-ந்தேதி ★ பிளாஸ்டிக் பை இல்லா கண்ணூர்- நல்ல நாடு, நல்ல மண்ணு ★ என்ற ஸ்லோகத்துடன் திட்டம் வகுக்கப்பட்டது. அதன்அடிப்படையில் சுமார் ஐந்து மாதங்களில் 81 கிராம பஞ்சாயத்து அதிகாரிகள் மற்றும் மக்களின் ஈடுபாட்டால் கண்ணூர் மாவட்டம் பிளாஸ்டிக் பை இல்லாத மாவட்டமாக உருவாகியுள்ளது.

26] **ஆந்திரா மாநில அமைச்சரவையில் முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் மகன் லோகேஷ் , தகவல் தொழில் நுட்பம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சராக பதவியேற்றுள்ளார்.**

27] **அசாம் மாநிலம், குவாஹாத்தியில் இந்தியாவின் மிகப்பெரிய நதித் திருவிழா " நமாமி பிரம்மபுத்திரா " (பிரம்புத்திரா நதியை வணங்குதல்) விழாவை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று தொடங்கி வைத்துள்ளார்.**

28] **மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் 2017-ம் ஆண்டிற்கான தேசிய கல்வி நிறுவனங்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.**

- ✓ தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இந்தியன் இன்ஸ்டியூட் ஆஃப் பெங்களூர் முதலிடத்தையும், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் 2-வது இடத்தையும், பனாரஸ் இந்து யுனிவர்சிட்டி 3-வது இடத்தையும் பிடித்துள்ளது.
- ✓ நாட்டின் தலைசிறந்த பொறியியல் கல்லூரியாக சென்னை ஐஐடி தேர்வு செய்யப்பட்டுள்ளது. இப்பட்டியலில் 8-வது இடத்தை சென்னை அண்ணா பல்கலைக்கழகம் பிடித்துள்ளது.
- ✓ நாட்டின் சிறந்த கல்லூரிகள் பட்டியலில் முதலிடத்தை டெல்லியின் மிரந்தா ஹவுஸ் கல்லூரி பிடித்துள்ளது. சென்னை லயோலா கல்லூரி 2-வது இடத்தைப் பிடித்துள்ளது. 3வது இடம் டெல்லி ஸ்ரீராம் கல்லூரி , 4-வது இடத்தை திருச்சி பிஷப் ஹெபெர் கல்லூரியும், 10-வது இடத்தை மெட்ராஸ் கிறிஸ்டியன் கல்லூரியும் பிடித்துள்ளன.
- ✓ கல்லூரிகள் பட்டியலில் முதல் 20 இடங்களில் டெல்லியைச் சேர்ந்த 8 கல்லூரிகளும், தமிழகத்தை சார்ந்த 9 கல்லூரிகளும் உள்ளன.

**29] ரிசர்வ் வங்கி கவர்னரின் அடிப்படை சம்பளம் ரூ 90,000/ லிருந்து ரூ 2.5 லட்சமாகவும், துணை கவர்னரின் அடிப்படை சம்பளம் ரூ 80,000/ லிருந்து ரூ 2.25 லட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.**

- ✓ இது ஜனவரி 01/ 2016 லிருந்து அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**30] மெக்ஸிகோவின் லியான் சாலஞ்சர் டூர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் , கனடாவின் அடில் ஷமஸ்டினுடன் ஜோடி ,,, சுவிட்சர்லாந்தின் லுகா மார்கரோலி , பிரேசிலின் கரோ சாம்பியேரி ஜோடியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றனர்.**

**31] மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் , இங்கிலாந்து வீராங்கனை ஜொஹன்னா கோன்டா, டென்மார்கின் கரோலின் வோஸ்னியாக்கியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.**

**32] இந்திய ஓபன் பாட்மிண்டன் போட்டி, ஆண்கள் ஒற்றையர் இறுதி போட்டியில் டென்மார்க் வீரர் விக்டர் அலெக்சென் ( Viktor Axelsen ) , தைவானின் சோடீன்சென் ஐ வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.**

**33] இணைய சேவை வழங்கும் நிறுவனமான ACT Fibernet ஒரு Gbps வேகத்திலான இணைய சேவையை ஹைதரபாத்தில் அறிமுகம் செய்தது. இந்தியாவில் இந்த சேவையை அறிமுகம் செய்யும் முதலாவது நிறுவனம் ACT Fibernet ஆகும்.**

- ✓ உலகத்தில் வெகு சில நகரங்களில் மட்டுமே ஒரு Gbps வேகம் இருக்கிறது. பென் டிரைவில் இருந்து தகவல் மாறுவதற்கு ஆகும் நேரத்தை விட இணையத்தில் வேகமான தரவிறக்கம் செய்ய முடியும்.
- ✓ இந்தியாவின் சராசரி இணைய வேகம் 2 Mbps ஆகும். சராசரியை விட 400 மடங்கு வேகத்தில் ACT Fibernet இயங்கும்.

**34] அமெரிக்க அதிபரின் உதவியாளராக , ( ஊதியம் வழங்கப்படாத பணியாளராக ) அதிபர் டிரம்பின் மூத்த மகள் இவான்கா_டிரம்ப் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

- ✓ ஏற்கனவே இவான்காவின் கணவரான ஜாரெட்டு குஷ்னெர், அதிபர் டொனால்ட் டிரம்புக்கு மூத்த ஆலோசகராக விளங்கி வருகிறார்.

**35] இந்தியா ஓபன் பேட்மிண்டன் தொடரின் மகளிர் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இந்தியாவின் PV சிந்து, ரியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற ஸ்பெயினின் கரோலினா மரினை வீழ்த்தி [ 21-19, 21-16 புள்ளிகள் ] சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.**

- ✓ { P.V. சிந்து காலிறுதியில் சாய்னா நேவலையும் , அரையிறுதியில் தென்கொரியாவின் Sung Ji Hyun வீழ்த்தி இருந்தார். }

**36] இந்திய கிரிக்கெட் கட்டுப்பாடு வாரியத்தின் ( BCCI ) சார்பில் நடத்தப்படும் அனைத்து உள்நாட்டு கிரிக்கெட் கோப்பைகளையும் வென்ற முதல் அணி என்ற பெருமையை தமிழ்நாடு அணி பெற்றுள்ளது.**

- ✓ ரஞ்சி கோப்பை -- 1987 / 88
- ✓ 02) இரானி கோப்பை -- 1988 / 89
- ✓ 03) விஜய் ஹசாரே கோப்பை -- 2016 / 17 ( Totally 5 times )
- ✓ 04) தியோதர் கோப்பை -- 2016 / 17
- ✓ 05) சையது முஸ்டாக் அலி கோப்பை -- 2007 / 08

**37] ஆசிய ஹாக்கி கூட்டமைப்பு வழங்கும், 2016ம் ஆண்டுக்கான**

- ✓ ★ ஆசியாவின் சிறந்த வீரர் விருது -- S.V. சுனில்
- ✓ ★ ஆசியாவின் நம்பிக்கைக்குரிய வீரர் விருது ( Promising Player ) -- ஹர்மன்பிரீத் சிங் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இவர்கள் இருவரும் இந்திய வீரர்கள் ஆவர்.

**38] பசுவை கொல்பவர்களுக்கு 14 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் 1 லட்சம் முதல் 5 லட்சம் வரை அபராதம் விதிக்கும் சட்டம், குஜராத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

- ✓ தற்போது 3 முதல் 7 ஆண்டுகள் சிறை தண்டனை என்ற சட்டம் அமலில் உள்ளது.

**39] பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களை தடுக்க , உத்திரபிரதேச காவல்துறை ஏற்படுத்தியுள்ள சிறப்பு அதிரடிப்படை --- Anti Romeo Squad**

- ✓ இதே போன்று மத்திய பிரதேச காவல்துறை ஏற்படுத்தியுள்ள சிறப்பு அதிரடிப்படை --- Anti Majnoo Squad

**40] டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி வரும் இந்திரா பானர்ஜி , சென்னை உயர்நீதிமன்றத்தின் 47வது தலைமை நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

- ✓ காந்தகுமாரி பட்நாகரை அடுத்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது பெண் தலைமை நீதிபதியாக இந்திரா பானர்ஜி நியமிக்கப்பட்டுள்ளார்.

**41] இந்திய ராணுவ தலைமை தளபதி பிபின் ராவத், நேபாள ராணுவ கவுரவ ஜெனரலாக அந்நாட்டின் ஜனாதிபதி பிந்தியா தேவி பண்டாரி அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

**42] Jal marg vikas project ன் மூலம் உருவாக்கப்பட உள்ள தேசிய நீர் வழி பாதை - 1க்கு ( National water way 1) ( வாரணாசி முதல் ஹால்டியா வரை 1390 Km ) உலக வங்கி 375 மில்லியன் டாலர் கடனுதவி வழங்கியுள்ளது.**

**43] சீனாவில் நடந்து வரும் ஆசிய கிராண்ட்பிரீ தடகள போட்டியில் , பெண்களுக்கான குண்டு எறிதலில் இந்திய வீராங்கனை மன்பிரீத் கவுர் 18.86 மீட்டர் தூரம் வீசி தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.**

**44] விண்வெளியில் அதிக நாட்கள் இருந்தவர் என்ற சாதனையை அமெரிக்க விண்வெளி வீராங்கனை Peggy Whitson ஏற்படுத்தியுள்ளார்.**

- ✓ ஏப்ரல் 24 / 2017 வரை 534 நாட்கள் விண்வெளியில் இருந்துள்ளார்.

**45] நோபல் பரிசு பெற்றவரும், குழந்தைகள் நல உரிமை ஆர்வலருமான கைலாஷ் சத்யார்த்தி , 2017ம் ஆண்டின் P.C. சந்திர புரஷ்கார் விருது பெற்றுள்ளார்.**

**46] ★ கங்கா சரண் சிம்ம விருது --- எம்.கோவிந்தராஜன் ★**

- ✓ மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் மத்திய இந்தி நிறுவனம், இந்தி மொழியின் வளர்ச்சிக்காக பாடுபடுவோருக்கு, சுப்பிரமணிய பாரதியார் உட்பட 12 மொழி அறிஞர்களின் பெயரில் இந்த அமைப்பு ஆண்டுதோறும் விருது வழங்குகிறது.
- ✓ தமிழரும் இந்தி மொழி அறிஞருமான எம்.கோவிந்தராஜன் உள்ளிட்ட 5 பேருக்கு கங்கா சரண் சிம்ம விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

- ✓ ரூ.5 லட்சம் பொற்கிழி, சால்வை மற்றும் பாராட்டுப் பத்திரம் கொண்ட இந்த விருதை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி விரைவில் வழங்கவுள்ளார்.
- ✓ உ.பி.யின் அலகாபாத்தில், மொழிகளைப் பாலமாக வைத்து நாட்டு மக்களை இணைக்கும் பாஷா சங்கம் செயல்படுகிறது. இதன் பொதுச் செயலாளராக கோவிந்தராஜன் பணியாற்றி வருகிறார்.
- ✓ துளசி ராமாயணம் உட்பட பல்வேறு நூல்களை இவர் இந்தியில் மொழிபெயர்த்துள்ளார். இதுபோன்ற இந்தி மொழி சேவைக்கான விருதுகளை கோவிந்தராஜன் இதற்கு முன் பலமுறை பெற்றுள்ளார்.

**47] Abel Prize 2017 : Yves Meyer**

- ✓ கணிதத்தின் நோபல் பரிசு என அழைக்கப்படும் ஏபல் பரிசு , பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த Yves Meyer பெறுகிறார்.
- ✓ 2016 ஏபல் பரிசு வென்றவர் -- Briton Andrew Wiles

**48] BRABO [ Bravo Robot ]**

- ✓ Tata நிறுவனத்தின் துணை நிறுவனமான TAL Manufacturing Solutions சார்பில் , முற்றிலும் இந்திய தொழில் நுட்பத்திலான தொழிற்சாலை பயன்பாட்டுக்கான இயந்திர மனிதன் உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ இதற்கு BRAVO ROBOT , சுருக்கமாக BRABO என பெயரிட்டுள்ளனர்.

**49] ஏப்ரல் 25 -- உலக மலேரியா தினம்**

- ✓ கருப்பொருள் -- Ending Malaria For Good
- ✓ மலேரியாவுக்கான முதல் தடுப்பூசி ( RTS,S vaccine --- வணிக பெயர் Mosquirix ) கானா, கென்யா மற்றும் மலாவியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ அடுத்த ஆண்டு தொடங்கி, இரண்டு ஆண்டுகளில் ஏழரை லட்சம் சிசுக்களுக்கு இந்த தடுப்பூசி போடப்படுகிறது.
- ✓ ஒருவருக்கு இந்த புதிய தடுப்பூசி மொத்தம் நான்கு முறை வழங்கப்படவேண்டும். மாதம் ஒரு முறை என்று முதல் மூன்று முறைகளும், அதன் பிறகு 18 மாதங்கள் கழித்து நான்காவது முறையாக இந்த தடுப்பூசியை போடவேண்டும்.

**50] ◆ தொல்காப்பியர் விருது ◆**

- ✓ 2013 - 2014 = சோ.ந. கந்தசாமி
- ✓ 2014 - 2015 = அ. தட்சிணாமூர்த்தி
- ✓ 2015 - 2016 = இரா. கலைக்கோவன்
- ✓ நினைவுப் பரிசும் ரூ.5 லட்சம் பரிசுத் தொகையும் அடங்கியது இது.

**★ 30 - 40 வயதுக்கு உட்பட்ட இளம் அறிஞர் விருது ★**

**■ 2013. - 2014**

1. உல. பாலசுப்பிரமணியன்
2. கலை. செழியன்
3. சோ. ராஜலட்சுமி
4. த. மகாலெட்சுமி
5. செள. பா. சாலாவாணிஸ்ரீ

**■ 2014 - 2015**

1. அ. சதீஷ்
2. ஜெ. முத்துச்செல்வன்
3. ப. திருஞானசம்பந்தம்
4. மா. வசந்தகுமாரி
5. கோ. சதீஷ்

**■ 2015 - 2016**

1. மு. வனிதா
2. வெ. பிரகாஷ்
3. ஸ்ரீ பிரேம்குமார்
4. க. பாலாஜி
5. மு. முனீஸ் மூர்த்தி

**நினைவுப் பரிசும் ரூ.1 லட்சம் பரிசுத் தொகையும் அடங்கியது இது.**

• தமிழியல் ஆய்வில் ஈடுபட்டு ஒப்பிலாப் பங்களிப்பை வழங்கியுள்ள அயல்நாடு வாழ் இந்தியத் தமிழறிஞர் ஒருவருக்கும், பிற நாட்டுத் தமிழறிஞர் ஒருவருக்கும் வழங்கப்படும் நினைவுப் பரிசு & ரூ.5 லட்சம் பரிசுத் தொகையும் அடங்கிய குறள்பீடம் விருது இன்னும் அறிவிக்கப்படவில்லை.

**51] பசுமை நோபல் பரிசு என வருணிக்கப்படும் கோல்ட்மேன் சுற்றுச்சூழல் விருது, வேதாந்தா நிறுவனத்தின் நியமகிரி கனிவளம் தோண்டும் திட்டத்தை வெற்றிகரமாக தடுத்த சமூக செயல்பாட்டாளர் பிரபுல்ல சமந்த்ரா உட்பட 6 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.**

- ✓ விருது பெற்ற மற்ற 5 நபர்கள் --- அமெரிக்காவின் மார்க் லோபஸ், ஸ்லோவேனியாவின் யுரோஸ் மேக்ரெல், கவுத்தமாலாவின் ரோட்ரிகோ டோட், காங்கோ குடியரசின் ரோட்ரிக் கடெம்போ, ஆஸ்திரேலியாவின் வெண்டி போமேன்.
- ✓ 1990-ம் ஆண்டில் இந்த விருது முதன் முதலாக நிறுவப்பட்டதிலிருந்து மேதா பட்கர், எம்.சி.மேத்தா, ரஷிதா பீ, சம்பரன் சுக்லா, ரமேஷ் அகர்வால் ஆகிய 5 இந்திய சமூக ஆர்வலர்கள் இந்த விருதுகளைப் பெற்றுள்ளனர், இந்தப் பட்டியலில் சமந்த்ரா 6-வது நபராக இன்று இணைந்துள்ளார்.

**52] போக்குவரத்து விதிகளை மீறும் போலீஸ்காரர்களை பற்றி தகவல் தரும் பொதுமக்களுக்கு ரூ.1000 வழங்கும் திட்டத்தை ஹரியானா மாநிலம், ரோத்தக் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிமுகம் செய்துள்ளார்.**

**53] பதற்றம் நிலவும் நாடுகளில் அமைதியை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் நடத்துவதற்கு ஐ.நா. தேர்தல் விவகார பிரிவிற்கு இந்தியா 2.5 லட்சம் டாலர்கள் நிதியுதவி அளித்துள்ளது.**

**54] 157 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தமிழக ஆளுநர் மாளிகை பொதுமக்கள் சுற்றிப்பார்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

- ✓ வாரத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு என 3 நாட்கள் மட்டுமே அனுமதி உண்டு. நாள் ஒன்றுக்கு 20 பேருக்கு மட்டுமே அனுமதி. நபர் ஒருவருக்கு ரூ.25 கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்ய வேண்டும்.
- ✓ ஏற்கனவே மகாராஷ்டிரா மற்றும் ஒடிஸா ஆளுநர் மாளிகைகளை பொதுமக்கள் சுற்றிப்பார்க்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**55] தென்னாப்ரிக்காவின் ஜோகன்னஸ்பார்க் நகரில் நடைபெற்ற வெஸ்ட் ரேன்ட் ஓபன் ஸ்குவாஷ் இறுதிப்போட்டியில், இந்திய வீரர் வேலவன் செந்தில்குமார், எகிப்து வீரர் முகமது எல்ஷேர்பினியிடம் தோல்வியை தழுவினார்.**

- ✓ கடந்த வாரம் நடைபெற்ற பார்க்வியு ஓபன் ஸ்குவாஷ் இறுதிப்போட்டியிலும் இந்திய வீரர் வேலவன் செந்தில்குமார், எகிப்து வீரர் முகமது எல்ஷோர்பினியிடம் தோல்வியை தழுவினார்.

**56] மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டி, ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால், சக நாட்டு வீரர் ஆல்பர்ட் ராமோஸ்ஜ வீழ்த்தி 10வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.**

- ✓ 2005 - 2012 வரை தொடர்ந்து 8 முறையும், 2016 & 2017 என பத்து முறை இப்போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
- ✓ நடால் , இதுவரை களிமண் தரையில் மட்டும் 50 பட்டங்களை வென்றுள்ளார்.

**57] சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு விருதுகள் - 2016**

★ தமிழ்த்தாய் விருது == மாணவர் மன்றம், தமிழ் அமைப்பு

★ கபிலர் விருது == முனைவர் இல.க. அக்னி புத்திரன்

★ உ.வே.சா விருது == முதுமுனைவர் ம.அ. வேங்கடகிருஷ்ணன்

★ கம்பர் விருது == திரு. இலங்கை ஜெயராஜு,

★ சொல்லின் செல்வர் விருது == திரு. பி. மணிகண்டன்

★ ஜி.யு.போப் விருது == திருமதி. வைதேகி ஹெர்பர்ட்டு

★ உமறுப்புலவர் விருது == பேராசிரியர் முனைவர் தி.மு. அப்துல் காதர்

★ இளங்கோவடிகள் விருது == திரு. நா. நஞ்சுண்டன்

★ அம்மா இலக்கிய விருது == திருமதி ஹம்சா தனகோபால்

★ முதல்வர் கணினித் தமிழ் விருது == செல்வமணி

★ **மொழிபெயர்ப்பாளர் விருது** : -

01) திருமதி. நாகலட்சுமி சண்முகம்,

02) முனைவர் அ. ஜாகிர் உசேன்,

03) திரு. அல்லா பிச்சை (எ) முகம்மது பரிஸ்டா,

04) திருமதி உமா பாலு,

05) முனைவர் கா.செல்லப்பன்,

06) செல்வி வி. சைதன்யா,

07) திரு. சி.முருகேசன்,

08) திரு.கு.பாலசுப்பிரமணியன்,

09) திரு.ச.ஆறுமுகம்பிள்ளை,

10) முனைவர் கே.எஸ். சுப்பிரமணியன்

★ 2015ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருது == திரு.செ.முரளி (எ) செல்வ முரளி.

- ✓ விருதுகளைப் பெறுபவர்கள் ஒவ்வொருவருக்கும் பரிசுத் தொகையாக ரூபாய் 1 இலட்சமும், 1 சவரன் தங்கப் பதக்கமும், தகுதிச்சான்று மற்றும் பொன்னாடையும் வழங்கப்படும்.
- ✓ தமிழ்த்தாய் விருது பெறும் தமிழ் அமைப்பிற்கு விருதுத் தொகையாக ரூபாய் 5 இலட்சமும், கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

**கடந்த ஜனவரி 2017ல் தமிழக அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட தமிழக அரசு விருதுகள் .. ≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠≠**

★ திருவள்ளுவர் விருது 2017 -- புலவர் பா. வீரமணி

★ தந்தை பெரியார் விருது 2016 -- பண்ருட்டி. ராமச்சந்திரன்

★அம்பேத்கர் விருது 2016 -- மருத்துவர். ரா.துரைசாமி

★ பேரறிஞர் அண்ணா விருது 2016 -- கவிஞர் கூரம் மு.துரை

★ பெருந்தலைவர் காமராசர் விருது 2016 -- டி.நீலகண்டன்

★ மகாகவி பாரதியார் விருது 2016 -- முனைவர் கணபதி ராமன்

★ பாராதிதாசன் விருது கவிஞர் 2016 -- கோ. பாரதி

★ தமிழ் தென்றல் திரு.வி.க விருது 2016 -- பேராசிரியர் மறைமலை இலக்குவனார்

★ முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது 2016 -- மீனாட்சி முருகரத்தினம்

மேற்கண்டோருக்கு தமிழக அரசின் சார்பில் ரூ.1 லட்சத்துக்கான காசோலை, 1 சவரன் தங்கப் பதக்கம் மற்றும் தகுதி சான்றிதழ் விருது ஆகியன வழங்கப்படும்.

**58] அர்ஜெண்டினாவில் அஃகா மகுவோ என்ற இடத்தில் தொல்பொருள் ஆய்வாளர்களின் ஆராய்ச்சிக்குட்பட்ட பகுதியில் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முந்தைய உயிர்க்கருவுடனான டைனோசர் முட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

**59] 22nd European Union Film Festival In India**

- ✓ 22வது ஐரோப்பிய யூனியன் திரைப்பட விழா சென்னையில் மே 04 வரை நடைபெறுகிறது.

**60] ஆக்லாந்தில் நடைபெற்ற வேல்ட் மாஸ்டர்ஸ் கேம்ஸ், 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த 101 வயது பெண் கவுர் கலந்து கொண்டு, தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.**

- ✓ இது இவர் பெறும் 17 வது தங்கப் பதக்கம் ஆகும்.

**61] இந்திய சினிமாவிற்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காக 2016ம் ஆண்டின் 'தாதாசாகேப் பால்கே' விருது மூத்த நடிகர் மற்றும் இயக்குநரான கே.விஸ்வநாத்க்கு [ காசிநாதுனி விஸ்வநாத் ] வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**62] ஏப்ரல் 24 -- பஞ்சாயத்து ராஜ் தினம்**

- ✓ [ உள்ளாட்சிகளை சட்ட ரீதியாக வலுப்படுத்த இந்திய அரசியல் சாசன 73வது சட்டத் திருத்தம் அமலுக்கு வந்த நாள் 1993, ஏப்ரல் 24. ]

**63] மான்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் இறுதிப்போட்டியில் , இந்தியாவின் ரோகன் போபண்ணா, உருகுவேயின் பேப்லோ குயவாஸ் ஜோடி, ஸ்பெயினின் பெலிசியானோ லோபஸ் மற்றும் மார்க் லோபஸ் ஜோடியை வீழ்த்தி பட்டம் வென்றுள்ளனர்.**

- ✓ இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஜீவன் நெடுஞ்செழியன் உடன் இணைந்து போபண்ணா சென்னை ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

**63] ஏப்ரல். -- 23 இலக்கிய சிற்பி ஷேக்ஸ்பியர் பிறந்த நாள் & உலக புத்தக தினம்.**

- ✓ [ ஏப்ரல் - 02 உலக சிறுவர் புத்தக தினம் ]

**64] நிலம், வீடு வாங்க ஊழியர் வருங்கால வைப்பு நிதியிலிருந்து (இபிஎப்) 90% தொகையை எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**65] இந்தியாவில் மிகப் பெரிய ஜவுளி துறை கண்காட்சியை மத்திய அரசு நடத்த உள்ளது. காந்திநகரில் ஜூன் 30ம் தேதி நடைபெறும் இந்த " டெக்ஸ்டைல் இந்தியா 2017 " கண்காட்சியை பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளார்.**

**66] நிறுவனங்களின் இயக்குநர் குழுவில் சேரவும், நிறுவனங்களின் வரி அறிக்கையைத் தாக்கல் செய்யவும் ஆதார் கட்டாயம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஆதார் அடிப்படையிலான பயோமெட்ரிக் முறையில் விரல் ரேகைப் பதிவு கட்டாயமாகிறது என்று மத்திய நிறுவன அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

**67] கடந்த நிதி ஆண்டுக்கான பிஎப் தொகைக்கு 8.65 % வட்டி வழங்க நிதி அமைச்சகம் ஒப்புதல் வழங்கி இருக்கிறது.**

**68] பிரிட்டனில் முன்கூட்டியே வரும் ஜூன் 8-ம் தேதி பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று பிரதமர் தெரசா மே அறிவித்துள்ளார்**

**69] சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, ஐக்கிய நாடுகள் சபை ஜூன் 21ம் தேதி சிறப்பு தபால் தலை வெளியிடுகிறது.**

- ✓ ஐ.நா. வெளியிட உள்ள தபால் தலைகளில் 'ஓம்' என்ற எழுத்தும், யோகாவின் பல்வேறு நிலைகளும் இடம்பெற உள்ளன.
- ✓ இந்த சிறப்பு தபால் தலை நியூயார்க், ஜெனீவா, வியன்னா ஆகிய இடங்களில் உள்ள ஐ.நா. அலுவலகங்களில் வெளியிடப்பட உள்ளது.

**70] உலகில் நீடித்த அமைதிக்காக சிறந்த பங்களிப்பை வழங்கி வருபவர்களுக்கு, 'புதிதாக உருவாகி வரும் இளம் தலைவர்கள்' என்ற பெயரில் அமெரிக்க வெளியுறவுத் துறை ஆண்டுதோறும் விருது வழங்கி வருகிறது.**

- ✓ இந்த ஆண்டு மால்டா, இலங்கை, ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, தஜிகிஸ்தான், பெல்ஜியம், வியட்நாம், பெரு, இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய 10 நாடுகளைச் சேர்ந்த இளைஞர்களை அமெரிக்க தேர்ந்தெடுத் துள்ளது.
- ✓ பாகிஸ்தானில் அமைதிக்காக சிறந்த பங்களிப்பை வழங்கி வரும் ராஜ்குமார் என்பவர், இளம் தலைவர்கள் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**71] ஆஸ்திரேலிய அரசு வெளிநாட்டு பணியாளர்களுக்கு வழங்கி வந்த 457 விசா முறையை நீக்கி உள்ளது.**

- ✓ தற்போதுள்ள 457 விசா நடைமுறையில் ஆஸ்திரேலியாவில் உள்ள நிறுவனங்கள், தங்களுக்கு தேவையான திறன் கொண்ட வெளிநாட்டு பணியாளர்களை நான்கு ஆண்டுகளுக்கு பணிக்கு அமர்த்திக் கொள்ள முடியும்

**72] எல்.எச்.எஸ். 1140பி. சூப்பர் எர்த்**

- ✓ பூமியைப் போலவே உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ள புதிய கிரகம் ஒன்றை ஐரோப்பிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.
- ✓ சூரியக் குடும்பத்துக்கு அப்பால் 39 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள சிவப்பு நிற நட்சத்திரத்தை இந்தக் கிரகம் சுற்றிவருவதாக ஐரோப்பிய வானியல் மைய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். எல்.எச்.எஸ். 1140பி. சூப்பர் எர்த் என இந்த புதிய கிரகத்துக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. 500 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கிரகம் உருவாகி இருக்கக் கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- ✓ இந்தக் கிரகம் பூமியை விட அதிக விட்டம் கொண்டது என்று கூறும் விஞ்ஞானிகள், 25 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே இதன் மீது வெளிச்சம் விழுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

**73] யுஎஸ் ஓபன் கராத்தே சாம்பியன் ஷிப் போட்டி அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் ஏப்ரல் 12ம் தேதி முதல் 16ம் தேதி வரை நடைபெற்றது.**

- ✓ இந்த தொடரில் யாஷ்பால் சிங் தலைமையில் பங்கேற்ற இந்திய அணி 3 தங்கம், 2 வெள்ளி, 6 வெண்கலப் பதக்கம் என மொத்தம் 11 பதக்கங்களை வென்றுள்ளது.
- ✓ 18 முதல் 35 வயதுக்குட்பட்டோருக்கான கட்டா தனிநபர் பிரிவில் ஷெய்பாலி அகர்வால், அபிஷேக் சென்குப்தா ஆகியோர் தங்கமும்., குமிதி பிரிவில் இவர்கள் இருவரும் வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.
- ✓ கட்டா அணிகள் பிரிவில் ஷெய்பாலி அகர்வால், ஹர்சரண் சிங், அபிஷேக் சென் குப்தா ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி தங்கப் பதக்கம் கைப்பற்றியது.
- ✓ யாஷ்பால் சிங் ஒரு வெண்கலமும் ரன்டெஜ் சிங், ஹர்சரண் சிங் ஆகியோர் தலா இரு வெண்கலப் பதக்கமும் வென்றனர்.
- ✓ கட்டா அணிகள் பிரிவில் இந்தியாவுக்கு வெண்லகப் பதக்கம் கிடைத்தது.

**74] கடந்த 1948-ம் ஆண்டு மகாத்மா காந்தி உருவப் படத்துடன் வெளியிடப்பட்ட 4 தபால் தலைகள் இங்கிலாந்தில் ஏலம் விடப்பட்டுள்ளன.**

- ✓ காந்தியின் உருவப்படத்துடன், ‘சர்வீஸ்’ என்று ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டு தலா 10 ரூபாய் மதிப்புள்ள இந்த 4 தபால் தலைகளையும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த தபால் தலை சேகரிப்பாளர் ஒருவர், ரூ. 4 கோடியே 15 லட்சம் (5 லட்சம் பவுண்ட்) கொடுத்து ஏலம் எடுத்துள்ளார்.

**75] சண்டிகரில் நடைபெற்ற ஆசிய பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர் பங்கஜ் அத்வானி., சௌரவ் கோத்தாரியை தோற்கடித்து ஏழாவது முறையாக பட்டம் வென்றுள்ளார்.**

**76] 19வது ஆசிய தனி நபர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டிகள், சென்னையில் ஏப்ரல் 26 - 30 வரை நடைபெறவுள்ளது.**

**77] தென்னை விவசாயிகள் வருமானத்தை பெருக்கும் வகையில் தென்னை மரத்திலிருந்து “நீரா” பானத்தை உற்பத்தி செய்ய அனுமதி அளித்து தமிழக அரசு அறிவித்துள்ளது.**

- ✓ “நீரா” என்பது தென்னை மரங்களில் மலராத தென்னம்பாளையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஒரு பானமாகும். நொதிக்காத வகையில் உற்பத்தி செய்யப்படும் இந்த பானம், ஆல்கஹால் இல்லாத, உடல்நலத்துக்கு பெரிதும் உதவக்கூடிய இயற்கையான ஊட்டச்சத்து பானமாகும்.
- ✓ “நீரா” பானத்தில், வைட்டமின் ஏ, பி, சி அனைத்தும் ஒருங்கே கிடைப்பதுடன், உடல் வளர்ச்சிக்கு தேவைப்படும் தாது உப்புகளும் நிறைந்து காணப்படுகிறது.

**78] நாட்டிலேயே முதல் முறையாக திருநங்கைகளுக்கான விளையாட்டு போட்டிகள் கேரளாவில் நடைபெற உள்ளது.**

- ✓ ஏப்ரல் 28-ந்தேதி திருவனந்தபுரம் சென்ட்ரல் விளையாட்டு அரங்கத்தில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் திருநங்கைகள் பங்கேற்கிறார்கள். ஓட்டப் பந்தயம், தொடர் ஓட்டம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் என்று பல்வேறு போட்டிகள் நடைபெறுகிறது.

**79] ஏர் இந்தியா விமானங்களில் மூத்த குடிமக்களுக்கு சலுகையை பெற நிர்ணையிக்கப்பட்டிருந்த வயது வரம்பு 63ல் இருந்து 60 ஆக குறைக்கப்பட்டுள்ளது.**

- ✓ ஏர் இந்தியா விமானங்களில் மூத்த குடிமக்களுக்கு 50% கட்டண சலுகை அளிக்கப்படுகிறது.

**80] உலகின் வயதான பெண்மணியாக கருதப்பட்ட இத்தாலி நாட்டை சேர்ந்த எம்மா மொரனோ தனது 117-வது வயதில் காலமானார்.**

- ✓ 1899-ம் ஆண்டு நவம்பர் 29-ம் தேதி பிறந்த எம்மா, 19ம் நூற்றாண்டில் பிறந்து, உயிர் வாழ்ந்த கடைசி நபராக இருந்து வந்தார்.

- ✓ [ எம்மா மொரனோ மரணத்திற்குப்பின் ஜமைத்காவைச் சேர்ந்த வயலட் மோஸ் ப்ரவுன், உலகின் புதிய மிக வயதான மனிதராக உருவெடுத்துள்ளார். இவர் 117 ஆண்டுகள் 138 நாட்களைக் கடந்துள்ளார். ]

**81] உலகம் முழுவதிலும் வாழ்ந்து வரும் புத்த மதத்தினர், கவுதம புத்தர் பிறந்தநாளை ' வேசக் ' என்ற புனிதநாளாக கொண்டாடி மகிழ்கின்றனர்.**

- ✓ இந்த ஆண்டின் ' வேசக் ' தினத்தையொட்டி மே மாதம் 12-ம் தேதியில் இருந்து 14-ம் தேதிவரை புத்தமதம் தொடர்பான மாபெரும் சர்வதேச மாநாட்டை இலங்கையில் நடத்த ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது.
- ✓ புத்தர் பிறந்த நாள், ஞானம் அடைந்த நாள், பரிநிர்மாணம் அடைந்த நாள் ஆகிய 3 முக்கிய நிகழ்வுகளும் வைகாசி பௌர்ணமி தினத்தன்று நடந்ததாக புத்த மதத்தினர் நம்பி அத்தினத்தை புத்த பூர்ணி மாவாக கொண்டாடுகின்றனர். ஐ.நா சார்பில் மே 12 முதல் 14ம் தேதி வரை இலங்கையில் சர்வதேச விசாக தினம் (புத்த பூர்ணிமா) கொண்டாடப்படுகிறது.இந்தியா சார்பில் மோடி கலந்து கொள்கிறார்.
- ✓ கூடுதல் தகவல்:பிரதமர் மோடியின் வேண்டுகோளை ஏற்று ஜீன் 21ம் தேதியை சர்வதேச யோகாதினமாக 2015ல் ஐ.நா அறிவித்தது. சர்வதேச யோகா தினத்தன்று ஐ.நா சபை 'ஓம்' என்ற எழுத்தும் யோகாவின் பல்வேறு நிலைகளும் இடம்பெறும் சிறப்பு தபால் தலையை வெளியிடுகிறது. இந்த சிறப்பு தபால் தலை நியூயார்க் ஜெனிவா, வியன்னாவில் உள்ள ஐ.நா அலுவலகங்களில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**82] டியான்ஸோ -1 ( Tianzhou -1)**

- ✓ விண்வெளியில் நிரந்தரமான ஆய்வு நிலையத்தை நிறுவிட திட்டமிட்டுள்ள சீனா கடந்த 2013-ம் ஆண்டு 'டியாங்காங் 1' என்ற ஆய்வு விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. இந்த விண்கலத்தில் சென்ற மூன்று சீன விஞ்ஞானிகள் 15 நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்து பல்வேறு கட்ட ஆராய்ச்சிகளை நடத்தி முடித்து, வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினர்.

- ✓ இந்நிலையில், ஜிகுவான் மாகாணத்தில் உள்ள கோபி பாலைவனம் பகுதியில் இருந்து 'டியாங்காங் 2' என்ற விண்கலத்தை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதி சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- ✓ இதனையடுத்து, 'ஷென்ஸோ 11' என்ற விண்கலத்தில் இரண்டு விஞ்ஞானிகளை விண்வெளிக்கு அனுப்பி 'டியாங்காங் 2' விண்கலத்துடன் 'ஷெங்ஸோ 11' இணைத்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கான அடுத்தகட்ட திட்டத்தை சீனா மேற்கொண்டது.
- ✓ இந்நிலையில், இந்த ஆய்வு நிலையத்துக்கு தேவையான பொருட்களை ஏற்றி செல்வதற்காக சரக்கு விண்கலம் ஒன்றை சீனா தயாரித்தது. 'டியான்ஸோ-1' (Tianzhou-1) என பெயரிடப்பட்டுள்ள இந்த விண்கலம், திரவ நிலையில் இருக்கும் பிராண வாயு மற்றும் மண்ணெண்ணையினால் இயங்கும் (Long March-7 Y2 carrier rocket) ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளது.

**83] மாதொரு பாகன் என்ற தலைப்பில் பெருமாள் முருகன் எழுதிய நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பான One Part Women நூலுக்கு சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.**

- ✓ இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் --- அனிருத்தன் வாசுதேவன்

**84] ஏப்ரல் 22 -- உலக பூமி தினம்.**

கருப்பொருள். -- சுற்றுச்சூழல் மற்றும் பருவகால நிலை பற்றிய கல்வியறிவு.

**85] தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் S. பெலிக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.**

**86] வங்கதேசம், பாகிஸ்தான், தாய்வான், தென் கொரியா, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் ஹைட்ரஜன் பெராக்ஸைடு மீது டன் ஒன்றுக்கு கூடுதலாக 118 டாலர் பொருள் குவிப்பு வரி ( ஆன்டி டம்பிங் டூட்டி ) விதிக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.**

- ✓ இரும்பு துரு பிடிப்பதை தடுக்கவும், காகிதக் கூழை வெண்மை படுத்தவும் ஹைட்ரஜன் பெராக்ஸைடு என்ற ரசாயனம் பயன்படுத்தப்படுகிறது.

**87] அனைத்து வெடிகுண்டுகளின் தாய் ( MOAB) எனப்படுவதின் தொழில்நுட்ப பெயர் என்ன? Answer --- Massive ordnance air blast.**

**88] ரூ.13க்கு மூன்று வேளை உணவு வழங்கும் திட்டத்தை துவங்க உள்ளதாக அறிவித்துள்ள மாநிலம் எது ? அத்திட்டத்தின் பெயர் என்ன ?**

விடை -- உத்திரப்பிரதேசம் .., அன்னபூர்ணா போஜ்னாலயா

**89] மூன்றாம் பாலினத்தவர்களுக்கு கட்டணம் இல்லாமல் கல்வி வழங்கும் திட்டத்தை, இந்தியாவிலேயே முதலாவதாக அறிவித்துள்ள பல்கலைக்கழகம் எது?** விடை -- மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

**90] மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்ட, சிறந்த கால்நடை மருத்துவ பல்கலைக்கழங்கள் பட்டியலில் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்ற பல்கலைக்கழகம் எது ?**

விடை = கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம்., தமிழ்நாடு

**91] a) இந்தியாவில் சாண எரிவாயு மூலம் இயங்கும் பேருந்து எங்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது ?**

**b) 1 கிலோ சாண எரிவாயுக்கு எத்தனை கிலோமீட்டர் தூரம் செல்ல முடியும் ?**

**c) எந்த வழித்தடத்தில் இயக்கப்பட்டது?**

**விடை :-**

a) கொல்கத்தா

b) 6கி.மீட்டர்

c) Ultadanga - Garia

**92] UDAN திட்டத்தின் கீழ் எத்தனை வழித்தடம் கண்டறியப்பட்டுள்ளது?**

விடை -- 128 வழித்தடங்கள் .., ( 70 விமான நிலையங்கள் )

**93] 2017ம் ஆண்டின் உலக சுகாதார தின கருப்பொருள் ( theme ) என்ன ?**

விடை -- Depression ; Lets Talk

**94] இந்தோனேஷிய தலைநகர் ஜகார்தாவில் நடைபெற்ற ஜூனியர் கிராண்ட் பிரிக்ஸ் பாட்மின்டன் , பெண்கள் (15 வயது) ஒற்றையர் பிரிவு பைனலில் இந்திய வீராங்கனை காயத்ரி , சக இந்திய வீராங்கனை சமியா இமாத் பருக்கியை வீழ்த்தி, சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.**

- ✓ பெண்கள் (15 வயது) இரட்டையர் பிரிவு பைனலில் இந்தியாவின் காயத்ரி, சமியா இமாத் பரூக்கி ஜோடி இந்தோனேஷியாவின் கெல்லி லாரிசா, ஷெலாண்ட்ரி வயோலா ஜோடியை தோற்கடித்து கோப்பை வென்றுள்ளது.
- ✓ இந்திய வீராங்கனை காயத்ரி, பாட்மிண்டன் பயிற்சியாளர் கோபிசந்த் மகள் ஆவார்.

**95] Cartier Women's Initiative award**

- ✓ நைரீதா சர்வீசஸ் ( Naireeta Services) என்ற நிறுவனத்தின் மூலம் நீர் மேலாண்மை கருவிகளை சிறு விவசாயிகளுக்கு வழங்கி வருவதற்காக திருப்தி ஜெயின் சிங்கப்பூரின், கார்டியர் விமன்ஸ் இனிஷியேடிவ் விருது பெற்றுள்ளார்.

**96] Demonetisation and Black Money - எழுதியவர் -- சி.ராம் மனோகர் ரெட்டி**

**97] இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவிடம் தொழில்நுட்பத்தைப் பெற்று சுஸுகி மோட்டார் கார்ப்பரேஷன், தோஷிபா கார்ப்பரேஷன், டென்ஸோ கார்ப்பரேஷன் ஆகிய மூன்று ஜப்பான் நிறுவனங்களும் இணைந்து இந்தியாவில் லித்தியம் அயன் பேட்டரிகளை தயாரிக்க முடிவு செய்துள்ளன.**

**98] ஐஎன்எஸ் சென்னை**

- ✓ 15 - A என்ற திட்டத்தின் கீழ் முற்றிலும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் கட்டப்பட்ட 3வது நவீன ரக போர்க் கப்பல் இது.
- ✓ ஐஎன்எஸ் சென்னை கப்பல் கடந்த 2016 நவம்பர் 21ம் தேதி இந்தியக் கடற்படையில் சேர்க்கப்பட்டது.
- ✓ ஐஎன்எஸ் சென்னை' போர்க் கப்பலின் இலச்சினையாக (லோகோ) மஞ்சம்பட்டி ஜல்லிக்கட்டு காளையின் உருவம் இடம் பெற்றுள்ளது.
- ✓ 7 ஆயிரத்து 500 டன் எடை கொண்ட இக்கப்பலில் தரையில் இருந்து மற்றொரு தரைப் பகுதியில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் பிரமோஸ் ஏவுகணை, தரையில் இருந்து வானில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் ஏவுகணை, நவீன ரக ரேடார் கருவிகள், நீர்மூழ்கிக் கப்பல்கள், ராக்கெட் லாஞ்சர்கள், 2 ஹெலிகாப்டர்கள் மற்றும் அணுசக்தி, உயிரியியல் மற்றும் ரசாயன தாக்குதல்களை முறியடிக்கும் கருவிகள் உள்ளிட்டவை உள்ளன.

**99] ஸ்ரீநகர் இடைத்தேர்தலில் முன்னாள் முதல்வரும், தேசிய மாநாட்டு கட்சித் தலைவருமான ஃபரூக் அப்துல்லா வெற்றி பெற்றுள்ளார்.**

- ✓ இந்த வெற்றி மூலம் ஃபரூக் அப்துல்லா மூன்றவாது முறையாக மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ✓ இந்த தேர்தலில் 7.13% ஓட்டுகளே மட்டுமே பதிவானது.

**100] Ammaku Vandanam**

- ✓ நடப்பு கல்வியாண்டு முதல் 5000 பள்ளிகளில், மாணவர்கள் தங்கள் தாய்க்கு பாதபூஜை செய்யும் விழா நடத்தப்படும் என ஆந்திரா மாநில அரசு அறிவித்துள்ளது.

**101] சிங்கப்பூர் ஓபன் பாட்மிண்டன் இறுதி போட்டியில் இந்திய வீரர் சாய் பிரணீத் , சக இந்திய வீரர் கிடாம்பி ஸ்ரீகாந்தை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.**

- ✓ [ இறுதிப் போட்டியில் மோதிய 2 இந்திய வீரர்களும் கோபிசந்தின் பாட்மிண்டன் அகாடமியில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர் ]
- ✓ பெண்களுக்கான இறுதிப் போட்டியில் சீன தைபே வீராங்கனையான தாய் சூ , ஸ்பெயினின் கரோலினா மரினை தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை வென்றார்.

**102] தெலுங்கானாவில் கல்வி, வேலைவாய்ப்புகளில் பின்தங்கியுள்ள முஸ்லீம்களுக்கான இட ஒதுக்கீட்டை 4% லிருந்து 12% ஆகவும், பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டை 6% லிருந்து 10% ஆக உயர்த்தும் மசோதா நிறைவேறியுள்ளது.**

**103] ஆந்திர மாநிலம், அமராவதியில் ஐனவோலு கிராமத்தில் 100 கோடி செலவில் சட்ட மாமேதை அம்பேத்கர் நினைவு பூங்கா அமைக்க அம் மாநில முதல்வர் அடிக்கல் நாட்டியுள்ளார்.**

- ✓ இதில் 126 அடி உயர அம்பேத்கர் சிலை நிறுவப்படவுள்ளது.

**104] B.R. Ambethkar Scholl Of Commerce**

- ✓ கார்நாடகா அரசின் சார்பில் துவங்கப்பட உள்ள டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஸ்கூல் ஆப் காமர்ஸ் என்ற கல்வி நிலையத்திற்கான அடிக்கல்லை ஜனாதிபதி நாட்டியுள்ளார்.

**105] அனைவருக்கும் மின்சாரம்** ( Power For All 24 ×7 )

- ✓ மத்திய அரசிடம் இருந்து மின்சாரம் பெறும் திட்டத்தில் உ.பி. அரசு கையெழுத்திட்டுள்ளது.

**106] + 2 மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வி தகுதி கொண்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதம் ரூ 1,000 மற்றும் மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கு மாதம் ரூ 1,500 உதவித்தொகை வழங்கும் திட்டத்தை இமாச்சல பிரதேச அரசு துவக்கியுள்ளது.**

**107] அனைத்து வெடிகுண்டுகளின் தந்தை**

- ✓ இது ரஷ்யாவின் தயாரிப்பு ஆகும்.
- ✓ இதன் தொழிநுட்ப பெயர் -- Aviation Thermobaric Bomb of Increased Power ( ATBIP ) இது, 7100 கிலோ எடை கொண்டது. இதில் 44 டன் டி.என்.டி வெடிபொருளை நிரப்பலாம். ( அமெரிக்காவின் வெடிகுண்டுகளின் தாயில் 11 டன் வெடிபொருளை மட்டுமே நிரப்ப இயலும். )

**108] தமிழ அரசு, ஒவ்வோர் ஆண்டும் வேளாண்மை மற்றும் அறிவியல் துறைக்கான விருதுகளை வழங்கி ஆராய்ச்சியாளர்களை கௌரவித்து வருகிறது.**

- ✓ 2014-ஆம் ஆண்டுக்கான வேளாண் ஆராய்ச்சியாளர் விருதுக்கு வேளாண் பல்கலைக்கழகத்தின் உயிரியல் தொழில்நுட்பத் தலைவரும், புதுமை மையத் திட்ட இயக்குநருமான N. செந்தில் குமார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- ✓ சிறு தானிய உணவுப் பழக்கத்தை மீட்டதற்கும், மக்காச் சோளத்தில் மரபணு குறியீடு மூலமாக அதிக வைட்டமின் கொண்ட பீட்டா கரோட்டினை உருவாக்கியதற்காகவும், தமிழகத்தின் பருவ நிலைக்கு ஏற்ப ரொட்டி கோதுமை, சம்பா கோதுமை ரகங்களை உருவாக்கியதில் வெலிங்டன் மத்திய கோதுமை ஆராய்ச்சி நிலையத்தில் முக்கிய பங்காற்றியதற்காகவும் இவருக்கு இவ்விருது வழங்கப்படஉள்ளது.

**109] ஏப்ரல் - 15 -→ மூன்றாம் பாலினத்தவர் தினம்**

**110] உலக சுகாதார நிறுவனத்தின் சார்பில், டெல்லியில் சர்வதேச மருத்துவ மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது.**

**111] 2016ம் ஆண்டுக்கான ஆசியாவின் சிறந்த ஸ்குவாஷ் பயிற்சியாளர் விருது, இந்தியாவின் சைரஸ் போன்சா பெற்றுள்ளார்.**

**112] வறுமைகோட்டுக்கு கீழே உள்ள மூத்த குடிமக்களுக்கு உடல் சார்ந்த உதவிகள் மற்றும் வாழ்வாதார கருவிகள் வழங்கும் " ராஸ்ட்ரிய வயோஸ்ரீ யோஜனா " ( Rashtriya Vayosri Yojana ) என்னும் திட்டம் , மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் வெங்கையா நாயுடுவால் ஆந்திராவின் நெல்லூர் மாவட்டத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.**

**113] இந்திய நில அளவை துறை தனது 250வது ஆண்டை முன்னிட்டு Nakshe என்ற இணைய தளத்தை துவக்கியுள்ளது.**

**114] 2016ம் ஆண்டுக்கான உலக பாலின இடைவெளி பட்டியலில் இந்தியா 87வது இடம் பெற்றுள்ளது.**

**115] மத்திய உணவு பதப்படுத்துதல் துறையின் மூலம் SAMPADA -- Scheme for Agro-Marine Produce Processing and Development of Agro-Processing Clusters என்னும் ஒருங்கிணைந்த திட்டம் 6,000 கோடி செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.**

**116] 3rd G-20 Framework Working Group (FWG) Meeting Under German Presidency**

- ✓ ஜெர்மனி தலைமையில் G 20 நாடுகளின் கட்டமைப்பு பணிக்குழு மூன்றாவது கூட்டம் வாரணாசியில் மார்ச் 28 & 29ல் நடைபெற்றுள்ளது.
- ✓ ( பெர்லின் மற்றும் ரியாத்தில் , ஜெர்மனி தலைமையில் முதலிரண்டு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. )
- ✓ இதற்கு முன் மெக்சிகோ தலைமையில் 2012ல் ராஜஸ்தானிலும் , ஆஸ்திரேலியா தலைமையில் 2014ல் கோவாவிலும் ., துருக்கி தலைமையில் 2015ல் கேரளாவிலும் G 20 FWG கூட்டம் நடைபெற்றுள்ளது.

**117] சகர்மாதா நட்பு - 2017 ( Sagarmatha Friendhsip - 2017 )**

- ✓ நேபாளம், சீனா நாடுகளுக்கு இடையே முதல் கூட்டு ராணுவ பயிற்சி வரும் ஏப்ரல் 16-ம் தேதி காத்மண்டு நகரில் தொடங்குகிறது.
- ✓ சகர்மாதா என்பது எவரெஸ்ட் சிகரத்தின் நேபாள பெயர்.

**118] இந்திய அரசின் சார்பில் சட்ட மாமேதை , அண்ணல் அம்பேத்கரின் 126வது பிறந்த தின விழா ஐ.நா.சபையில் கொண்டாடப்பட்டுள்ளது.**

**119] GBU - 43/B -- Mother of All Bombs ( MOAB )**

- ✓ " அனைத்து வெடிகுண்டுகளின் தாய் " எனப்படும் அணுஆயுதமில்லா மிகப்பெரிய குண்டை MC - 130 அமெரிக்க விமானம் , ஆப்கானிஸ்தான் நாட்டில் நங்கர் மாகாணத்தில் உள்ள அச்சின் மாவட்டத்தில் மோமண்ட் தாரா என்னும் இடத்தில் வீசி உள்ளது.
- ✓ GBU - 43/B -- 1மீ விட்டமும் , 9 மீ நீளமும் , 9800 கிலோ எடை கொண்டது. 16 மில்லியன் டாலர் செலவில் ( சுமார் ரூ 103 கோடி ) உருவாக்கப்பட்டது. இதில் 11 டன் வெடிபொருள் நிரப்பலாம்.
- ✓ இந்த வெடிகுண்டின் தொழில் நுட்ப பெயர் --Massive Ordnance Air Blast (MOAB )
- ✓ [ அனைத்து வெடிகுண்டுகளின் தந்தை - ரஷ்யாவின் வசம் உள்ளது ]

**120] G 20 Digital Ministers Meeting On Digital Economy**

- ✓ எண்முறை பொருளாதாரம் பற்றி G 20 நாடுகளின் எண்முறை அமைச்சர்களின் கூட்டம் ஜெர்மனியின் Dusseldorf நகரில் நடைபெற்று முடிந்துள்ளது.

**121] டிஜிதன் என்ற ரொக்கமில்லா பரிமாற்றத்தில் ஈடுபட்டு, குலுக்கல் மூலம் ரூ.1 கோடி பரிசு பெற்றுள்ளவர் --- மராட்டிய மாநிலம் லட்டூரை சேர்ந்த ஸ்ரத்தா என்ற சிறுமி.**

- ✓ பீம்' ஆப் மூலம் பணம் செலுத்தும் முறைக்கு புதிதாக ஒருவரை அறிமுகப்படுத்தினால், அறிமுகப்படுத்துபவருக்கு ரூ.10 ரொக்க பரிசு வழங்கப்படும். இத்தொகை அவரது வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.
- ✓ 'பீம்' ஆப் மூலம் பரிமாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் வியாபாரிகளுக்கு ஒவ்வொரு பரிமாற்றத்துக்கும் 'கேஷ்பேக்' சலுகை வழங்கப்படும்.

**122] உத்தரபிரதேசத்தில் பெரிய தலைவர்களின் பிறந்த நாட்களில் பள்ளிகளுக்கு விடுமுறை கிடையாது என்று அம்மாநில முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.**

- ✓ தலைவர்களின் பிறந்தநாளில் அவர்களது வாழ்க்கை வரலாறு குறித்து மாணவர்களுக்கு ஆசிரியர்கள் எடுத்து கூறுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**123] மருத்துவப் படிப்புக்கான நுழைவுத் தேர்வை (நீட்) 2018-19-ம் கல்வியாண்டு முதல் உருது மொழியிலும் நடத்த மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

- ✓ தற்போது 'நீட்' தேர்வு தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, கன்னடம், ஒரியா, மராத்தி, குஜராத்தி, பெங்காலி, அசாமி ஆகிய 10 மொழிகளில் நடத்தப்படுகிறது.

**124] ஐ.சி.சி நடத்தும் சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் தொடர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாடுகளில் ஜூன் 1-ம் தேதி முதல் 18-ம் தேதி வரை நடைபெற இருக்கிறது.**

- ✓ மொத்தம் எட்டு நாடுகள் கலந்துகொள்ளும் இந்தத் தொடரை பிரபலப்படுத்தும் வகையில், இந்த எட்டு நாடுகளைச் சேர்ந்த முன்னாள் கிரிக்கெட் வீரர்களை தூதுவர்களாக ஐ.சி.சி நியமித்துள்ளது.
- ✓ இந்தியாவின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், தென்னாப்பிரிக்கா அணியின் முன்னாள் வீரர் கிரீம் ஸ்மித், ஆஸ்திரேலியாவின் மைக் ஹஸ்சி, இலங்கையின் குமார் சங்கக்கரா, இங்கிலாந்தின் இயான் பெல், பாகிஸ்தானின் ஷாகித் அஃப்ரிடி, வங்கதேசத்தின் ஹபிபுல் பாஷர், நியூசிலாந்தின் ஷேன் பாண்ட் ஆகியோர் 2017-ம் ஆண்டுக்கான ஐ.சி.சி சாம்பியன்ஸ் கோப்பைத் தொடருக்கான தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**125] அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலாவிற்கு கனடா நாடு கௌரவ குடியுரிமை வழங்கியுள்ளது.**

- ✓ வரலாற்று சிறப்பு வாய்ந்த செயல்களுக்காக நெல்சன் மண்டேலா, தலாய் லாமா, ஆங் சான் சூயி உள்ளிட்ட 6 வெளிநாட்டு தலைவர்களுக்கு ஏற்கனவே கனடா அரசு கௌரவ குடியுரிமை வழங்கியுள்ளது.

126] உத்திர பிரதேசத்தில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரிகளில் எஸ்.சி., எஸ்.டி, மற்றும் ஓ.பி.சி.-க்கான இட ஒதுக்கீட்டை யோகி ஆதித்யநாத் அரசு ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது.

**127] சமீபத்தில் Bitcoin பணத்திற்கு அதிகாரபூர்வ அங்கீகாரம் வழங்கிய ஆசிய நாடு எது?** விடை -- ஜப்பான்

**128] தேசிய குழந்தைகள் திரைப்பட விழா எங்கு நடைபெற்றது?**

விடை -- விசாகப்பட்டினம்

**129] நாளந்தா பல்கலைக்கழக துணை வேந்தராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?** விடை -- சுனைனா சிங்

**130] சிரியா மீது எடுத்த ராணுவ நடவடிக்கை மார்ச் 30 / 2017ல் நிறைவு பெற்றதாக துருக்கி அறிவித்தது. அந்த ராணுவ நடவடிக்கையின் பெயர் என்ன ?**

விடை -- Operation Euphrates Shield

**131] புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாநில தேர்தல் ஆணையரின் பதவி காலம் எவ்வளவு?** விடை. -- 2 ஆண்டுகள்

**132] இந்தியாவின் முதல் திருநங்கை காவல் அதிகாரி பிரித்திகா யாஷிணியின் இயற்பெயர் என்ன?** விடை. --- பிரதீப் குமார்

**133] இதற்குமுன் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்த கொல்கத்தா நபர் யார்?** விடை --- A.K. கங்குலி

**134] Operation Durga**

- ✓ பொது இடங்களில் பெண்களை கேலி செய்வோர் மற்றும் பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுவோரை கண்டுபிடிக்க ஹரியானா மாநில காவல்துறையினர், Operation Durga என்னும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.
- ✓ இதேபோன்று உ.பி . போலீசார் Anti Romeo Squad என்றும் ., ம. பி . போலீசார் Anti Majnoo Squad என்றும் செயல்படுத்தி வருகின்றனர்

**135] Matoshree**

- ✓ எழுதியவர் -- மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன்

**136] இங்கிலாந்தில் வசிக்கும் இந்திய வம்சாவழி பெண் ஆஷா கெம்கா (Asha Khemka) , Asian Businesswoman of Year விருது பெற்றுள்ளார்.**

**137] " சௌரிய சக்ரா " விருது பெற்ற , முதல் நாகாலாந்து காவல் அதிகாரி எனும் பெருமையை Atu Zumvu பெற்றுள்ளார்.**

**138] Indian Institute of Petroleum and Energy (IIPE) எனும் கல்வி நிலையத்தை, ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் அமைக்க மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

**139] மே ஒன்றாம் தேதி முதல் 5 நகரங்களில் பெட்ரோல், டீசல் விலையை தினந்தோறும் மாற்றம் செய்ய எண்ணைய் நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.**

- ✓ புதுச்சேரி, ஆந்திர மாநிலம் விசாகப்பட்டணம், ராஜஸ்தான் மாநிலம் உதாம்பூர், ஜார்கண்ட் மாநிலம் ஜாம்செட்பூர் மற்றும் சண்டிகாரில் இத்திட்டம் அமலுக்கு வருகிறது.

**140] Inter - Ministerial Monitoring-cum-Coordination Committee**

- ✓ மத்திய சிவில் விமான போக்குவரத்து துறையின் சார்பில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள " உடான் " [ UDAN -- Ude Desh Ka Aam Naagrik ] திட்டத்தினை கண்காணிக்கவும், ஒருங்கிணைக்கவும், அமைச்சகங்களுக்கு இடையிலான குழு உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ இக்குழுவின் தலைவராக சிவில் விமான போக்குவரத்து துறை செயலாளர் ராஜிவ் நயன் சௌபே நியமிக்கப்பட்டுள்ளார்.

**141] உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக இருந்து இயற்கை மரணம் அடையும் விவசாயி குடும்பத்துக்கான உதவிதொகையினை ரூ.10,000யிலிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தி தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உத்தரவிட்டுள்ளார்.**

- ✓ [ தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" என்ற சமூக பாதுகாப்புத் திட்டம் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் 15.8.2005 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது.]

**142] ★ கெப்லர் 1649 ★**

- ✓ விண்வெளியில் உள்ள கிரகங்கள் மற்றும் நட்சத்திரங்களை கண்டுபிடித்து ஆய்வு மேற்கொள்ள அமெரிக்காவின் 'நாசா' மையம் கெப்லர் விண்கலத்தை அனுப்பியுள்ளது. அதில் அதி நவீன சக்தி வாய்ந்த டெலஸ்கோப் பொருத்தப்பட்டுள்ளது.

- ✓ அந்த டெலஸ்கோப் சமீபத்தில் ஒரு புதிய கிரகத்தை கண்டுபிடித்து அதை போட்டோ எடுத்து பூமிக்கு அனுப்பியுள்ளது.
- ✓ அது ஏற்கனவே உள்ள வெள்ளி (வீனஸ்) கிரகத்தை போன்றே உள்ளது.
- ✓ அதன் விட்டம் சூரியனை விட 5-ல் ஒரு மடங்கு உள்ளது. பூமியில் இருந்து 219 வெளிச்ச ஆண்டு தூரத்தில் உள்ளது. மிக குறைந்த தட்பவெப்பம் நிலவுகிறது.
- ✓ அதற்கு கெப்லர் 1649 என பெயரிட்டுள்ளனர்.

**143] ★ மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவோருக்கு விதிக்கப்படும் அபராதம் ரூ.2 ஆயிரத்தில் இருந்து 10 ஆயிரமாகவும்,**

★ ஹெல்மெட் அணியாத இரு சக்கர வாகன ஓட்டிகளுக்கு விதிக்கப்படும் அபராதம் 100 ரூபாயில் இருந்து 1,000 ரூபாயாகவும் ,

★ அவசர ஊர்திகளுக்கு (ஆம்புலன்ஸ் வாகனங்கள்) வழி விடாமல் சென்றால் ரூ.10 ஆயிரம் அபராதம்,

★ காப்பீட்டு நிறுவனம், வாகன விபத்துக்கு அதிகபட்சமாக ரூ.10 லட்சமும், படுகாயம் அடைந்தால் ரூ.5 லட்சமும் இழப்பீடு வழங்கவும் வகைசெய்யும் மோட்டார் வாகன திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

**144] எச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளின் உரிமைகளை பாதுகாக்க மத்திய அரசு " எச்.ஐ.வி. (தடுப்பு, கட்டுப்பாடு) மசோதா-2017 " என்ற மசோதாவை நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றியுள்ளது.**

- ✓ ஜனாதிபதி பிராணப் முகர்ஜி தனது ஒப்புதலை அளித்தவுடன் இது சட்டமாகி அமலுக்கு வரும்.
- ✓ இந்த சட்டத்தின்படி எச்.ஐ.வி., மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளிடம், யாரேனும் பாரபட்சமாக நடந்து கொண்டால் அவர்களுக்கு 3 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்க முடியும்.

**145] மும்பை மாநகராட்சியின் எதிர்க்கட்சி தலைவராக தமிழர் ரவிராஜா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- ✓ காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இவரது சொந்த ஊர், ராஜபாளையம் ஆகும்.
- ✓ இவர் தற்போது 4-வது முறையாக கவுன்சிலராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**146] Telecom Disputes Settlement & Appellate Tribunal (TDSAT).**

- ✓ தொலைத்தொடர்பு தகராறுகள் தீர்வு மற்றும் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி ஷிவா கீர்த்தி சிங் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**147] கேரள பள்ளிகளில் 10ம் வகுப்பு வரை மலையாளம் மொழி கற்பிப்பதை கட்டாயமாக்கும் வகையில் அம்மாநில அரசு கொண்டு வந்த அவசர சட்டத்தில் ஆளுநர் சதாசிவம் கையெழுத்திட்டுள்ளார்.**

**148] USIBC Transformative Chief Minister Award**

- ✓ அமெரிக்க இந்திய வர்த்தக கவுன்சில் ( US India Business Council ) ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடுவிற்கு Transformative Chief Minister என்ற விருதை வழங்குவதாக அறிவித்துள்ளது.

**149] UNESCO/Guillermo Cano World Press Freedom Prize Award 2017**

- ✓ 2017ம் ஆண்டுக்கான யுனெஸ்கோ - கல்லெர்மோ கெனோ உலக பத்திரிகை சுதந்திர பரிசை , எரித்ரியா நாட்டை பூர்வீகமாக கொண்ட , தற்போது சுவீடனில் வசித்து வரும் டாவிட் இசாக் (Dawit Isaak ) பெறுகிறார்.

**150] India On Track ( IOT ) என்ற திட்டத்தின்படி அமெரிக்காவின் தேசிய கூடைப்பந்து கூட்டமைப்பின் ( National Baseket Ball Association of USA -- NBA ) சார்பில் , கூடைப்பந்து பள்ளி மும்பையில் துவங்கப்பட்டுள்ளது.**

**151] Exercise Nomadic Elephant 2017**

- ✓ இந்தியா மற்றும் மங்கோலியா ராணுவங்கள் இணைந்து மேற்கொள்ளும் 12வது ராணுவ பயிற்சி Nomadic Elephant 2017 , மிசோரமில் ஏப்ரல் 05 முதல் 18 வரை நடைபெறுகிறது.

**152] Swachhagraha - Bapu Ko Karyanjali - Ek Abhiyan, Ek Pradarshani .**

- ✓ சத்தியாகிரகம் துவங்கியதின் 100ம் ஆண்டை முன்னிட்டு , புதுடெல்லியில் Swachhagraha - Bapu Ko Karyanjali - Ek Abhiyan, Ek Pradarshani என்ற கண்காட்சியை பிரதமர் மோடி துவக்கி வைத்துள்ளார்.

**153] உலக மல்யுத்த கூட்டமைப்பு, மல்யுத்த வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.**

- ✓ ஆண்களுக்கான 57 கிலோ Free style பிரிவில் இந்திய வீரர் சந்தீப் தோமர் 7வது இடம் பெற்றுள்ளார்.
- ✓ ஜார்ஜியாவின் விளாடிமிர் கின்செகாஷ்விலி முதலிடம் பெற்றுள்ளார்.
- ✓ பெண்களுக்கான 58 கிலோ Free style பிரிவில் இந்தியாவின் சாக் ஷி மாலிக் 5வது இடம் பிடித்துள்ளார்.
- ✓ ஜப்பானின் கோரி இசோ முதலிடம் பிடித்துள்ளார்.

**154] Pink Hoysala Patrol Vechicle**

- ✓ பெங்களூருவில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் தொல்லைகளை தடுக்க " பிங்க் ஹொய்சாலா " ரோந்து வாகனங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- ✓ பெண்கள் தங்களது பிரச்சனைகளை தொலைபேசி மூலமாகவோ அல்லது சுரக்சா app மூலம் தெரிவித்தால் ரோந்து வாகனத்தில் உள்ள பெண் காவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்வார்கள்.

**155] மனநலம் பாதிக் கப்பட்டவர்களின் உரிமைகளைக் காக்கும் 'மனநலம் பராமரிப்பு சட்டம் -2017' க்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்துள்ளார்.**

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள் :-**

- ✓ மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிர்ச்சி சிகிச்சை (ஷாக் தெரபி அல்லது எலக்ட்ரோ கன்வல்சிவ் தெரபி) அளிக்க தடை விதிக்கப்படுகிறது. அவர்களை சங்கிலியால் கட்டி வைக்க கூடாது.
- ✓ மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் அதிக மன அழுத்தம் காரணமாக தற்கொலை முயற்சி செய்தால், அவர்களை தண்டிக்கக் கூடாது.
- ✓ மனநலம் பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிப்பது, அவர்களுக்கு சிகிச்சை அளிப்பது, அவர்களின் மறுவாழ்வுக்கு நடவடிக்கை எடுப்பது ஆகியவை மத்திய, மாநில அரசுகளின் கடமை.
- ✓ மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை எடுத்துக் கொள்வதற்கும், மருத்துவ காப்பீடு வழங்கவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

**156] ஃபிபா அறிவித்துள்ள சமீபத்திய தரவரிசை நிலையில் இந்திய கால்பந்து அணி 101-வது இடத்தில் உள்ளது.**

- ✓ 46 ஆசிய கால்பந்து அணிகளில் இந்திய கால்பந்து அணி தற்போது 11-ம் இடத்தில் உள்ளது.
- ✓ { 1994-ம் ஆண்டு இந்திய அணி 94-ம் இடத்தில் இருந்தது. 1993-ம் ஆண்டு 100-ம் இடம் பெற்று இருந்தது. }

**157] லண்டன் நகர நீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவழியை சேர்ந்த அனுஜா ரவிந்திரா திர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

**158] ★ 64வது தேசிய திரைப்பட விருதுகள் ( 2016 ) ★**

- ✓ சிறந்த படம் : மராட்டிய மொழிப் படம் - காசவ்
- ✓ சிறந்த இயக்குநர் : ராஜேஷ் மபுஸ்கா - மராட்டிய படம்- வென்டிலேட்டர்
- ✓ சிறந்த தமிழ்ப் படம் : ஜோக்கர் ( இதன் இயக்குநர் ராஜூ முருகன் )
- ✓ சிறந்த நடிகை : சி.எம்.சுரபி - மலையாளப் படம் மினாமினுகு படத்தில் நடித்தமைக்காக
- ✓ சிறந்த நடிகர் : அக்ஷய் குமார் ( ரூஸ்டம்)
- ✓ சிறந்த பாடலாசிரியர் : கவிஞர் வைரமுத்து ( தர்மதுரை படத்தில் இடம்பெற்ற 'எந்தப்பக்கம்' பாடலுக்காக 7வது முறையாக )
- ✓ சிறந்த தயாரிப்பு வடிவமைப்பு : 24 ( தமிழ் படம் )
- ✓ சிறந்த ஒளிப்பதிவாளர் : திருநாவுக்கரசு ( 24 படத்திற்காக )
- ✓ சிறந்த உறுதுணை நடிகை : ஜாய்ரா வாசிம் - தங்கல்
- ✓ சிறந்த பாப்புலர் திரைப்படம் - சதாமனம் பவதி (தெலுங்கு)
- ✓ சிறந்த குழந்தைகள் திரைப்படம் - தனக்
- ✓ சிறந்த அனிமேஷன் திரைப்படம் - மஹோாயோத ரானா (இந்தி)
- ✓ சிறந்த சண்டை வடிவமைப்பு : பீட்டர் ஹெய்ன் (புலிமுருகன்)
- ✓ சிறந்த குழந்தை நட்சத்திரம் : அதீஷ் பிரவீன் (படம்: குஞ்சு தெய்வம்), சாஜ் (படம்: நூர் இஸ்லாம்), மனோகரா (படம்: ரயில்வே சில்ட்ரன்)
- ✓ சிறந்த பின்னணி பாடகி : இமான் சக்ரபர்த்தி
- ✓ சிறந்த பின்னணி பாடகர் : சுந்தரா ஐயர் (ஜோக்கர் - ஜாஸ்மின் பாடல் )
- ✓ சிறந்த திரைக்கதை (ஒரிஜினல்) : ஷ்யாம் புஷ்கரன்
- ✓ சிறந்த திரைக்கதை (தழுவல்) : சஞ்சய் கிருஷ்ணஜி படேல்
- ✓ சிறந்த நடன அமைப்பு : ராஜூ சுந்தரம் (ஜனதா கார்கே)

- ✓ சிறந்த இசையமைப்பு : பாபு பத்மநாபா (அலமா)
- ✓ சிறந்த ஒப்பனை : எம்.கே.ராமகிருஷ்ணா
- ✓ சிறந்த எடிட்டிங் : ராமேஷ்வர் - வென்டிலேட்டர்
- ✓ சிறந்த ஒப்பனை : சைக்கிள் திரைப்படத்துக்காக சச்சின் லவேல்கர்
- ✓ சிறந்த ஒலி வடிவமைப்பு : காடு பூக்கும் நேரம் - ஜெயதேவன் சக்கா தத்
- ✓ சிறந்த துணை நடிகர் : தசாகிரியா - மராத்தி
- ✓ சுற்றுச்சூழல் நலன் பேணும் சிறந்த திரைப்படம் - தி டைகர் வூ கிராஸ்ட் தி லேன் (The Tiger who crossed the lane)
- ✓ சமூக பிரச்சனைகள் சார்ந்த சிறந்த திரைப்படம் - அமிதாப் பச்சனின் 'பிங்க்'
- ✓ தேசிய ஒறுமைப்பாட்டை பறைசாற்றியதற்காக நர்கீஸ் தத் விருது பெறும் திரைப்படம் : திக்சோவ் பனாத்
- ✓ அறிமுக இயக்குநருக்கான இந்திராகாந்தி விருது பெறும் சிறந்த திரைப்படம் : அலிபா (வங்கமொழி) இயக்குநர்- தீப் சவுத்ரி
- ✓ சினிமா துறைக்கு இணக்கமான மாநிலம் : உத்தரப் பிரதேசம்.
- ✓ சிறந்த திரைப்பட விமர்சகர் : தனஞ்சயன்
- ✓ சிறந்த சினிடா புத்தக விருது : லதா சுர்கதா ( லதாமங்கேஷ்கர் வாழ்க்கையை எழுதியவர் )

**★ சிறந்த பிராந்திய மொழி திரைப்படங்கள் ★**

- ✓ மதிபூர் (துளு)
- ✓ ஜோக்கர் (தமிழ்)
- ✓ ராங்சைட் ராஜூ (குஜராத்தி)
- ✓ பெல்லி சூப்புலு (தெலுங்கு)
- ✓ தசகரியா (மராத்தி)
- ✓ பிஸார்ஜன் (வங்காளம்)
- ✓ மகேஷின்ட பிரதிகாரம் (மலையாளம்)
- ✓ கே சரா சரா (கொங்கனி)
- ✓ ரிசர்வேஷன் (கன்னடம்)
- ✓ நீர்ஜா (இந்தி)

**★ தேர்வு குழுவின் தலைவர் -- இயக்குநர் பிரியதர்ஷன் ★**

**159] ஜெர்மனி நாட்டிற்கான இந்திய தூதராக முக்தா தத்தா டோமரை மத்திய அரசு நியமித்துள்ளது.**

- ✓ [ ஜெர்மனி நாட்டிற்கான இந்திய தூதராக பணியாற்றிய குர்ஜித் சிங்கின் பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்தது. ]

**160] Bharat ke Veer Poral & App**

- ✓ பணியில் இருக்கும் போது தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்த துணை ராணுவப்படை வீரர்களின் குடும்பத்தினருக்கு உதவும் விதமாக "Bharat ke Veer" என்ற இணையதளம் மற்றும் மொபைல் அப்ளிகேஷனை உள்துறை அமைச்சர் மற்றும் ஹிந்தி நடிகர் அக்சய் குமார் இணைந்து அறிமுகம் செய்துள்ளனர்.
- ✓ இதனை தேசிய தகவலியல் மையம் மற்றும் பாரத ஸ்டேட் வங்கி இணைந்து உருவாக்கியுள்ளன.

**161] நமது நாட்டில் 13 முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளை மன அழுத்தத்தில் இருந்து மீட்டு வெளியே கொண்டுவரும் சீரிய தொண்டில் சென்னையை சேர்ந்த 'நிம்கேர்' என்ற தொண்டு நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.**

- ✓ இந்த அரிய சேவைக்காக இந்த நிறுவனத்தின் 'எனது மகிழ்ச்சி திட்டம்' ("My Happiness project") என்ற புதிய திட்டத்தை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தொடங்கி வைத்துள்ளார்.

**162] Economic Reforms with Reference to Electoral issues**

- ✓ " தேர்தல் விவகாரங்களுடன் கூடிய பொருளாதார சீர்திருத்தங்கள் " என்ற கருத்தரங்கு டெல்லியில் ஏப்ரல் 08 & 09ல் நடைபெற்றுள்ளது.

**163] Standing Committee of Inter - State Council (ISC)**

- ✓ மாநில கவுன்சிலின் 11வது நிலைக்குழு கூட்டம் , உள்துறை அமைச்சர் தலைமையில் இன்று டெல்லியில் நடைபெற்றுள்ளது.
- ✓ இதில் மத்திய நிதி அமைச்சர், திரிபுரா , சட்டீஸ்கர், ஒடிஷா & உ.பி முதல்வர்கள் கலந்து கொண்டுள்ளனர்.
- ✓ இதற்கு முன் இக்கூட்டம் 2005ல் நடைபெற்றது.

**164] கொல்கத்தாவில் இருந்து பங்களாதேஷின் குல்னா நகர் இடையே வரும் ஜூலை முதல் பயணிகள் ரயில் இயக்கப்பட உள்ளது.**

- ✓ இதற்கான சோதனை ஓட்ட ரயில் " பெட்ராபோல் " நிலையத்தில் இருந்து இயக்கப்பட்டுள்ளது. இதனை பிரதமர் மோடி மற்றும் பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா இணைந்து காணொளி காட்சி மூலம் துவக்கி வைத்துள்ளனர்.